# சிங்கை ஆரம்

## பிரதேச மலர்

மலராசிரியர்
**திருமதி ரஜனி குமாரசிங்கம்**
கலாசார உத்தியோகத்தர்

வெளியீடு :
பிரதேச கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்
நல்லூர்.
இலங்கை

## நூல் விவரக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் | : | சிங்கை ஆரம் |
| வெளியீடு | : | பிரதேச கலாசாரப் பேரவை<br>பிரதேச செயலகம்<br>நல்லூர். |
| மலராசிரியர் | : | திருமதி ரஜனி குமாரசிங்கம். கலாசார உத்தியோகத்தர் நல்லூர். |
| முதற்பதிப்பு | : | ஏப்ரல் 2015 |
| நூல் அளவு | : | B5 |
| பக்கங்கள் | : | XX + 332 |
| பிரதிகள் | : | 350 |
| பதிப்புரிமை | : | நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை.<br>பிரதேச செயலகம், நல்லூர். |
| பதிப்பகம் | : | நோபிள் பிறின்டேர்ஸ்,<br>ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.<br>ISBN 978-955-7778-00-6 |

| | | |
|---|---|---|
| Journal | : | Singai Ahram |
| Publishers | : | Nallur Divisional Cultural Organisation<br>Divisional Secretariat<br>NALLUR. SriLanka |
| Editor | : | Rajani Cumarasingam, Cultural Officer Nallur. |
| First Edition | : | April 2015<br>ISBN 978-955-7778-00-6 |
| Size | : | B5 |
| Pages | : | XX + 332 |
| Copies | : | 350 |
| Copyright | : | Nallur Divisional Cultural Organisation<br>Divisional Secretariat<br>NALLUR. |
| Printing | : | Noble Printers,<br>Hospital Road, Jaffna. |

# நல்லூரப் பிராந்தியமும் நெசவுக் கைவினைப் பாரம்பரியமும்

செல்வி கிருபாலினி பாக்கியநாதன்
B.A. (Fine Arts)

## முன்னுரை

நாகரிகங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சியில் குறித்த இடத்தின்புவியியல், அமைவிடம் மற்றும் சுற்றுச்சூழல் முக்கியமானது. இலங்கையின் ஆரம்ப நாகரீகங்கள் பெரும்பாலும் ஆற்றங்கரையோரங்களினை அண்டியே தோன்றின அவ்வகையே விவசாயம் அவர்களது வாழ்வாதாரத் தொழிலாகக் காணப்பட்டது ஆனால் யாழ்குடாநாட்டில் அவ்வகையான ஆறுகள் இல்லாமையினால் இங்கு விவசாயம் ஒரு பகுதியளவிலும் பெரும்பான்மை கைத்தொழிலும், வர்த்தகமுமே காணப்பட்டது அதற்கேற்ப வர்த்தக தந்திரோபாயங்கள் மற்றும் போக்குவரத்து பாதைகளும் சாத்தியப்பாடளித்தன. வர்த்தகத்திலும் ஆடை வர்த்தகமே முக்கியம் பெற்றிருந்தது. காலனியம்வருவதற்க்குமுன்னரான காலத்திலேயே நெசவும், புடவை வியாபாரமும் வெறுமனே உள்ளூரில் மட்டுமன்றி நாடு கடந்தும் இடம்பெற்றுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை உடைதான் மேற்குடனான வர்த்தகத்தில் முக்கிய பண்டமாக அமைந்தது. இது தென் ஆசியாவிற்கானபொதுப்பண்பும்கூட. இவ்வகையே முக்கிய வர்த்தக பண்டமாக நெசவு காணப்பட்டமையானது காலனித்துவ வருகையின்போது வெவ்வேறு வர்த்தகப் பண்டங்களாக மாறின. இலங்கையின் பிரதான இராச்சியங்களில் ஒன்றாக விளங்கிய யாழ்ப்பாண இராச்சியத்தினை எடுத்துக்கொள்ளின் யாழ்ப்பாண அரசுகாலத்தே முத்துக் குளித்தல் மற்றும் சங்கு குளித்தலினை அடுத்து பொருளாதாரரீதியாக இரண்டாவது முக்கியம் பெற்றிருந்தது நெசவும், சாயமிடலுமே. போர்த்துக்கேயர் தமது குறிப்பிலே யாழ்ப்பாண அரசனை "சாயராசா" (zaya rasa) என்று அழைத்துள்ளமை இதற்குச் சான்றாகும்.

பண்டைய யாழ்ப்பாணத்தில் பல வகையான பாரம்பரியக் கைத்தொழில்கள் காணப்பட்டன. அவை அவர்களது வாழ்வியலோடு கலையுணர்ச்சியின் ஆதாரமாகவும் வளர்க்கப்பட்டன. பண்டைய யாழ்ப்பாணத்தவர் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களில் பெரும்பகுதியை தாமே உற்பத்தி செய்து கொண்டனர். இவ்வகையே எமக்கு தேவையான துணிகளினை நெய்து தம் தேவையை பூர்த்தி செய்தவர்களாகவும் அதன்வழிதம்கலையுணர்வுக்குஓர்வடிகாலமைத்தமையையும் அவர்களது நுண்ணிய வேலைப்பாடுகள், ஆதாரங்களின் வழி அறியமுடிகின்றது. யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக விளங்கிய நல்லூர் பிராந்தியத்தின் மக்களின் பொருளாதார, வாழ்வியல் பண்பாட்டின் அடிப்படைக் குறிகாட்டியாகவும், கைவினைப் பாரம்பரியமாகவும் முக்கியம் பெற்றிருந்தது. சாயமிடலிலும் நெசவிலும் யாழ்ப்பாணத்தின் மற்றைய பாகங்களோடு ஒப்பிடுகையில் பாரியதோர் முற்பாரம்பரியத்தோடு ஊடாடிய இப்பிராந்தியத்தில் இன்று இவற்றை மறந்த தலைமுறையினையே நாம்

காண்கின்றோம். இதற்கு பிரித்தானியக் காலனித்துவத்தின் தந்திரோபாயங்களே வலுவூட்டின என்பதில் சந்தேகமில்லை. 19ம் நூற்றாண்டில் கைத்தொழிற் புரட்சி மற்றும் காலனித்துவ மாற்றங்களினால் பெருவாரியான ஆலைத்தொழிலாக நெசவுபண்டம் நிலைப்படுத்தப் பட்டது. அதனோடு போட்டிபோட முடியாதும் நின்று நிலைக்கமுடியாதும் நெசவுப் பாரம்பரியம் தன்னிருப்பினை இழந்தது. இவ்வகையாக யாழ்ப்பாணத்தில் நெசவு படிப்படியாக தம் மதிப்பினை இழந்து முழுமையாக ஓர் சிறு பொருளாதார உற்பத்திமுறையாகவும், ஓர் வகையில் ஓர்காலகட்டத்தில் குறித்த சாதிக்கான குறிகாட்டியாகவும் பார்க்கும் நிலவரமும் உருவாகியது. இன்றைய நிலையில் இந்நிலையானது முழுமையாக ஓர் கைத்தொழில் ஆகவும் அரசின் கைத்தொழில்கல்வியூட்டலின் ஓர்சிறு கூறாகவுமே இனம்காண்கின்ற நிலையுள்ளது.

## நல்லூர்ப் பிராந்தியமும் நெசவுடனான சமூகத்தினரும், சமூகத் தொடர்பும்

மனித வெளிப்பாடுகளில் கைவினை என்பதே குறிப்பிட்ட சாதி, இனத்தவரால் பயிலப்படுவதாகும். சமூக செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்ட கலை, கைவினைப் பாரம்பரியத்தையும், கலை, கைவினைப் பாரம்பரியத்திற்கு அப்பாற்பட்ட சமூகமும் கிடையாது. கால்மாக்ஸ் கூறுவது போல் "ஒரு சமூகஅமைப்பு எப்படி இருக்கிறதோ? ஒரு சமூகத்தின் பௌதீக வாழ்நிலைகள் எப்படி இருக்கிறதோ? அவ்வாறுதான் சமூகத்தின் அரசியலும், மதமும், ஏனைய அறிவுகளும் அவை தொடர்பான கோட்பாடுகளும் இருக்கின்றன" யாழ்ப்பாணச் சமூகத்தினை விளங்கிக்கொள்ளாது இதன் பின்னாலான எந்தக் கூறினையும் முழுமையாகப் புரியமுடியாது. அவ்வகையே யாழ்ப்பாணச் சமூகம் என்பதே பல்வேறு சிக்கல் கொண்ட அதிகாரப் படிநிலைச் சமூகமாகும். இவ்வதிகாரப்படிநிலைசாதிய, மதஇயல்புடையது. இதற்கு எமது வழக்கிலுள்ள தேசவழமைச் சட்டம் சான்றாகவுள்ளது. யாழ்ப்பாணச் சாதியமைப்பிலே தொழில் பிரதான அடிப்படையாகின்றது. இதனால் இங்கு சாதி நிலைப்பட்ட தொழிற்பிரிவுக்கே அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதனால் இங்கு அடி நிலையினரின் சமூகமேனிலைப்பாடு என்பது பாரம்பரியத் தொழிலைக் கைவிடுவதிலேயே தங்கியுள்ளது.

யாழ்ப்பாணச் சாதியமைப்பிலே ஓர் ஒழுங்கமைதி முறைமை உண்டு. ஒன்று உயர்ந்தது மற்றையது தாழ்ந்தது எனும் கருத்தும், உறவு அமைதியும் உண்டு அத்தோடு ஒவ்வோர் சாதிக்கும் உரிமைகளும், கடமைகளும் வகுக்கப்பட்டிருந்தன. சாதி உருவாக்கத்திற்கான காரணிகளில் தொழிற் பிரிவினையும் ஒன்றாகவுள்ளது. இன்ன சாதியினருக்கு இன்னதொழில் உரித்துடையது என வகுக்கப்பட்டிருந்தன. அவ்வகையே நெசவு மற்றும் சாயமிடல் யாழ்ப்பாண இராச்சியத்திலும் சாதிரீதியாககட்டப்பட்டதாககாணப்பட்டுள்ளது. இதற்கான தடயங்கள் தமிழ்நூல்களாகிய யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல் ஆகியவற்றிலிடம் பெறுவதோடு இத்தோடு இந்நூலில் பல்வேறு சாதியினர் வாழ்ந்த இடங்கள் பற்றிய குறிப்புகளுமுள்ளன. அதுமட்டுமன்றி சாதிபற்றியநேர்முகக் குறிப்புகளினை டச்சுக்கார ஆட்சியின்போது ஆரம்பத்தில் சமய நடவடிக்கைகளிலீடுபட்ட போல் டேயஸ் பாதிரியாரின் குறிப்புகளிலும், டச்சுத் தேசாதிபதிகளின் நினைவேடுகளிலும் காணமுடிகின்றது. இவ்டச்சு ஆவணங்களில் கிபி17ம் நூற்றாண்டில் ஆட்சிசெய்த தொமஸ் வான்றீயின் 1697ல்

வெளியிடப்பட்ட நினைவேட்டில் வடபகுதியிற் காணப்பட்ட 40சாதிகள் பற்றிய குறிப்பும் அவைகள் கிழக்கிந்தியக் கம்பனிக்கு இறுத்த வரிப்பணம் பற்றியும் குறிப்பிடுகின்றது. அங்கே நெசவுடன் தொடர்புடையவர்களாக நெசவாளர், வேர்குத்திப் பள்ளர், சாயக்காரர், சித்திரக் காரர், கோலியப்பறையர் காலிக்காறர் ஆகியோர் பட்டியற்படுத்தப்பட்டுள்ளனர். இதோடு தொடர்புடைய சாதிகளாக கைக்கோளர், சேணியர், சாலியர், சாயக்காரர் மற்றும் பறையர் குறிப்பிடத்தக்கோர். ஆயினும் இவர்களைவிடப் பல உட்பிரிவுச் சாதிப் பிரிப்புகள் இவர்களிடமும் காணப்பட்டுள்ளமைக்கு S.Kathiresu's “Hand book to the Jaffna Penninsula & a souvenior of the opening the railway station to the north” இதில் நகர சேவகர்கள் பற்றிய வகைப்பாட்டினைத் தருகையில் 45பேர்களினை தருகிறார் அதில் 28வது இடத்தில்சாயமிடுவோர்சாயக்காரர் (chayakara, dyers) ஆடைநெய்வோரில் உயர்ந்த தாழ்ந்த என வெவ்வேறு குழுமத்தினர் காணப்பட்டதாக அவர்களினை 32-36வரை ஒழுங்கே சேடர், சேணியர், கோலியர், கைக்கோளர், சாலியர் எனவும் வகைப்படுத்தியுள்ளார். இவ்வாறு பல குறிப்புகள் கிடைப்பினும் யாழ்ப்பாணத்தில் கைக்கோளர், சாயக்காரர், பறையர் எனும் மூன்று சாதிக் குழுமமே பிற்காலத்தே அதிகம் நெசவினைக்குலத்தொழிலாகச் செய்தவர்கள் என அறிகின்றோம்.

கைக்கோளர்(Kaikkoa'lar) என்போர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஆதிநெசவுக் குழுமத்தினரில் ஒருவர். கை-கோள் (kai-koal) எனும் சொற்றொடர் பண்டைய தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில்(பொருள்:489) பயன்படுத்தப்பட்டுள்ளது. கைகோள் எனில் கைக்கொள்ளும் விடயங்கள். “கை”(kai) எனின் ஒழுக்கம் சரியான பழக்கவழக்கம் நடத்தைகள் என தொல்காப்பியம், திருக்குறள் (84:2) போன்றன விளக்கம் தருகின்றன. அதனால் கைக்கோளர் எனில் “ஒத்தவகைமையிலான பகிரப்பட்ட ஒழுக்கத்தினைக் கைக் கொள்ளும் மக்கள் குழுமம்” என அர்த்தமளிக்கப்படுகின்றது. இவர்களுக்கு “கைத்தோழர்” எனவே பெயர் இருந்ததாகவும் காலப்போக்கில் மருவி “கைக்கோளர்” எனப்பட்டதாகவும் இவர்கள் முருகப் பெருமானின் சகோதரர்களாகவும், படை வீரர்களாகவுமுடைய நவவீரருடைய வம்சாவழிகள் எனவும் தம்மை அதனுடன் இணைந்த சில யாழ்ப்பாணத்து சமூகத்தவர் கூறிக் கொள்ளினும் பொருத்தப்பாடுடையதா? கைக்கோளர் என்பது இச்சாதியினர் தம்மிடையே கைக்கொண்ட சட்ட திட்டம், சமூக நடைமுறை, சமூக கருத்தாக்கம் பற்றிய கைக்கோல் ஆகும். இதனைப் பின்பற்றுதல் கடினமானது ஏனெனில் அதில் அவ்வளவு இறுக்கங்களும் தண்டனைகளும் அதிகம். எல்லா கைவினைப் பட்டறைகளும் தமக்கென கைக்கோலினைக் கைப்பற்றுதல் மரபாகக் காணப்பட்டிருப்பினும். இவர்கள் அதனை மிகவும் இறுக்கமாக கைப்பற்றியதும், அதற்கு முக்கியமளித்தமையாலும்அதன்அடிப்படையிலே தம் சாதியின் பெயரினையும் வரித்துக் கொண்டனர்.

இவர்கள் போர்அற்ற காலங்களில் நெசவினையும் போர்க்காலங்களில் படை வீரர்களாக போரிலும் பங்கேற்றுள்ளனர். அதாவது வணிகப் பொருளாதாரத்தினபோது வேற்றுநாடுகளுக்கு தம் பொருட்களினை அனுப்பும் போது அதனைப் பாதுகாக்க வேண்டிய கடமையும் அதே வணிக குழுமத்தினையே சேர்ந்தது அவ்வகையே

அவர்கள் போர் அறிந்த படை வீரர்களாகவுமிருந்தனர். அவ்வகையே போரின்போது படைவீரர்களாகவும் அமைதியின்போது நெசவாளர்களாக வும் இருந்தனர். இதனை சோழர் கால தமிழ் கல்வெட்டுகளினின்று அறிந்துகொள்ள முடிகின்றது. கைக்கோளருக்கு மறுபெய ராக "செங்குந்தர்"(chengkunthar) எனும் பெயரும்பாவனையிலிருந்ததாகக்கூறப்படு கின்றது. "குந்தம்" எனின் ஈட்டி எனப் பொருள்படும் அதாவது நெசவுத்தறியின் முனையும் அவ்வாறே ஒத்தபொருள்படும் ஆகவே அதனின்றே இவர்களுக்கு இப்பெயர் உருவாகி யிருக்கவேண்டும். செங்குந்தர் எனும் குழு மங்கள் இங்கு வாழ்ந்ததற்கு சான்றாக இன்று கல்வியங்காட்டிலுள்ள "செங்குந் தாவீதி" முன்னர் "செங்குந்தர்வீதி" எனப் பட்டதாகவும் இதனையொட்டிய சந்தை "செங்குந்தர் சந்தை" என அழைக்கப் பட்டுள்ளன.

"சேணியர்" (Chea'niyar) எனி னும் நெசவுடன் தொடர்புடைய குழு மம் என்றே பொருள்படும். சமஸ் கிருதத்தில் "சேணி" எனும் சொற்றொடர் எல்லாவகைமையான கலைஞர் குழுமத் திற்கும் பொதுவானது. சேணியர்களின் பரம்பரைத்தொழிலும் நெசவு என 14ம் நூற்றாண்டிலான தமிழ் கல்வெட்டு களில் குறிப்புகளுள்ளன. இவ்வகைமை குழுமத்தினர் டச்சுக்காலத்தே யாழ்ப்பா ணத்தில் பெருமாள் கோவிலடியில் வாழ்ந்த தாகவும் இவர்கள் வர்ண ஆடைகளினை நெய்யும் குழுமத்தினர் என 1790ல் கிடைக்கும் சான்றுகள் வெளிப்படுத்து கின்றன. சேணியர், அத்தோடு இன்று "பெருமாள் கோவிலடி" என அழைக் கப்படுமிடம் முன்னர் "சேணியத்தெரு" என அழைக்கப்பட்டமையும், காலத்துக்கு காலம் இந்தியாவினின்று நெசவாளர் களினை இங்கு கொண்டு வந்த புலப் பெயர்வுச்சான்றுகளும் வலுவான சான்று களாக முன்வைக்கலாம்.

"பறையர்"எனும் குழுமமும் ஆரம்ப காலத்தே நெசவுடன் இணைந்த குழுமத்தினர் இவர்களே. இந்தியாவி னின்று சேணியர், செங்குந்தர் போன்ற நெசவுக்கான குழுமங்கள் வர முன்னரே யாழ்ப்பாணத்தில் நெசவு நூற்ற தாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் மத்தியகாலங்களின் ஆரம்ப, பிற்காலங் களில் தொழில்முறைகளின் வளர்ச்சியினால் பின்தள்ளப்பட்டனர். இவர்களினிலும் இரு வகைமையினர் நெசவுடன் அடையாளப் படுத்தப்பட்டனர். "கோலியப்பறையர்" (Koaliyap Pa'raiyar), "குழிக்காரப் பறையர்" (Kuzhikaarap-Pa'raiyar) இவ்விரு குழுமத்தினரும் 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை யாழ்ப்பாணத்தில் அறியப் பட்டுள்ளனர். இப்பெயர்களின் மூலங் கள் (Koal:loom-pole) "கோல்" எனில் தறியின் முனையையும், (முரணானவை) "குழி" எனில் கிடங்கினை நெசவுக் குழியினை குறிக்கும். அவர்கள் பயன் படுத்திய கருவிகள் மற்றும் நெசவின் நுட்பங்கள் அடிப்படையில் ஆகுபெயர் களாக முகிழ்ந்தன. இதேவேளை சாயவேர் கிண்டுபவர்களாகவும் இச் சாதியினர் காணப்பட்டுள்ளனர் அக்குழு மத்தினரினை "சாயவேர்ப்பறையர்" என அழைத்தனர். இவர்களினைப்பற்றி டச் சுக்கால ஆவணங்களினூடு அறிய முடிகின்றது. "வேர்குத்திப்பள்ளர்"என்னும் ஓர்சாதி பற்றியும் யாழ்ப்பாண சரித்திரம் குறிப்பிடுகின்றது. இவர் களும் சாயவேர் கிண்டுதலினையே தொழிலாகக் கொண்டிருந்தனர்.

துணிகள் மற்றும் நூலிற்கு சாயமிடு வோரினை "சாயக்காரர்" மற்றும் "வர்ணக் காரர்" "வெண்மைக்காரர்" என கூறப்பட் டனர். ஆயினும் அவர்களோடு இணைந்து குடியேற்றப்பட்டவர்கள்

"சித்திரக்காரர்" இவர்களது குலத் தொழில் திரைச்சீலைகள், சுவர் ஓவியங்கள், சித்திர விசித்திர வேலைகள் செய்தல், (அரண்மனை அலங்கார மேற்கட்டிகள், கோவிற்திரைகள்), சுவர் ஓவியங்கள், உடற் சாய்கை வரைதல் இவர்களினையும் சிலவிடத்தே தவறு தலாக "சாயக்காரர்" என அழைத் துள்ளனர். இவர்களின் மரபுகள் வெவ்வேறு ஆனால்இவ்வாறு பெயர்சுட்டுதல்தொழிற் பெயரேயொழிய மரபுப்பெயரல்ல என "யாழ்ப்பாணவைபவம்" சான்று பகிர்கின்றது. அத்தோடு கைவினைப் பாரம்பரியத்திலே கைவினைஞர்களி டையே பொதுவாக இவற்றினை விட்டு இடங்கையினர், வலங்கையினர் எனும் சாதிப்பிரிப்பும் காணப்படுகின்றது. வலங்கையினர் எனப்படுவோர் பயிர்ச் செய்கை தொடர்பானவர்கள் அதாவது நில மற்ற முறையில் கீழ் வேலை செய்ப வர்கள், இடங்கையர் என்பவர்கள் வணிகக் குழுமங்கள் அவர்களுக்கு வேலை மற்றும் சேவகம் செய்பவர்கள். கடல்கடந்த வணி கத்தின் அடிப்படை நெசவே அவ்வகையே வணிக அடிப்படையில்தொழிற்பட்ட நெச வாளர்கள் இடங்கையினர். இது ஓர்வகையில் இந்தியாவின் சோழர்காலத் தின் தாக்கத்தின் நீட்சியாக காணப்படு கின்றது ஆனால் அது அங்கு சிக்க லான ஓர் தொடர்ச்சியாகவும் காணப் பட்டது.

ஆனந்தக்குமாரசுவாமி இலங்கையின் கைவினைப் பாரம்பரியம் பற்றி குறிப்பிடு கையில் கைவினைஞர்களினை வகைப் படுத்துகையில் இவ்வகைமை சிறுசாதிப் பிரிப்புகள் எதனையும் கூறாது பொதுவாக ஆடைநெய்வோர் என ஓர் இடத்தினை இக்கைவினைப் பாரம்பரியமுடையோருக்கு வழங்கு கின்றார்.

யாழ்ப்பாண இராச்சியத்தினைப் பொறுத்தவரையில் கொல்லர், பொற் கொல்லர், கன்னார், குயவர், தச்சர் போன்ற பஞ்சகம்மாளரையும் கைக்கோளர், சாயக் காரர் போன்றோரையும் ஆரியச்சக்கரவர்த் திகள் காலத்துக்குக்காலம் கிபி13-17ம் நூற்றாண்டு காலத்தில் தென்னிந்தியாவிலி ருந்து அழைத்துவந்தனர் என்று தமிழ் நூல் கள் கூறுகின்றன. குணவீரசிங்கையாரி யன் எனும் மன்னன் காஞ்சிபுரத்தி லிருந்தும் ஆந்திரதேசத்திலிருந்தும் கைக் கோளரை அழைத்துவந்தான் என யாழ்ப்பாண இராச்சியத்தில் கூறப்பட் டுள்ளது. யாழ்ப்பாண சரித்திரத்திற்கு பின்னர் வெளியிடப்பட்ட யாழ்ப்பாண சரித்திரம் தொடர்பாக யாழ்ப்பாண வைபவகௌமுதி மெஸ். க. வேலுப் பிள்ளை அவர்களினால் வெளியிடப்பட்ட நூலில் குணபூஷசிங்கையாரியச் சக்கர வரத்தி முடிதரித்தபின்னர் வடதேசத் திலுள்ள மருகூரிலிருந்து நாயக்கரில் ஒரு மரபினரையும், கவறைமரபின ரையும் வரவழைத்து நல்லூரிலுள்ள கோட்டைக்குத் தென்மேற்குப் புறமாகயிருந்த ஆவணவீதியில் குடியேற்றி வைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படு கின்றது. இன்று பருத்தித்துறையிலுள்ள சாயக்காரர் எனப்படுவோர் இவ்விரண்டு மரபின் கலப்பினராவர். கவறைமரபினர் சாயக்காரர்களாகும் இவர்கள் சாயவேலைப் பாடு செய்வதற்காக மேலும் வரவழைக்கப் பட்டு ஆனைக்கோட்டையிலும், ஆரிய குளப்பகுதிகளிலும் குடியமர்த்தப்பட் டனர். நாயக்கர்கள் சித்திர விசித்திர வேலைப்பாடு செய்பவர்களாகவும் இவர் களே நல்லூர் கோட்டைக்குத் தென்புற மாக குடியமர்த்தப்பட்டதாகவும் இவர்கள் வர்ணங்களினைக் கொண்டு திரைச்சேலை கள் (அரண்மனை அலங்கார மேற்கட்டி கள், கோவிற்திரைகள்), சுவர் ஓவியங் கள், உடற்சாய்கை போன்றன வரைந்து வந்துள்ளனர். அதனால் இவர்களினை யும் சாயக்காரர் எனத்தவறுதலாக

அழைத்துள்ளனராயினும் இவர்கள் சித்திரக்காரர்களாகும். நாயக்கரின் தொழிலேசித்திரவிசித்திர வேலைப்பாடுகளினைச் செய்தலே இதுவும் அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*"இந்திய மருகூர்தன்னி லிருந்தோரே*
*வினைஞராகி வந்தவர் கவறையோடு,*
*வன்றி*
*றல் நாயக்கராவார்*
*இந்நற் குடியினோரை யாழ்நக ரழைத்த*
*கோமான*
*கோந்தவிழ் கோதைமார்பன் குணபூஷ*
*ணார்ரென்பர்.*
*வந்திடு குடியினோர்க்கு வளந்தவழ்*
*நல்லூர் தன்னிற்*
*சொந்தமண் பதிகொடுத்*
*துத் துணைமிகப் புரிந்துவாழ்த்தி*
*விந்தையாய் வஸ்திரத்தில் விசித்திர*
*மெழுதிவந்து*
*என்றனக் களிப்பீர் கோவிலரண்மனைக்*
*குதவவென்றார்"*

யாழ்நகரின் மன்னர்களின் காலத்தே இவர்களுக்கான வாழ்விடங்கள் செய்யும் தொழில்களுக்கேற்ப தனியாக பிரிக்கப் பட்டிருந்தன. சிங்கைநகரின் சிறப்புப்பற்றி யாழ்ப்பாணச்சரித்திரத்தில் கனகசூரியன் காலக்குறிப்புகளினிலே "பழைய இராஜதானி இராசவீதிகளும் அரண்மனைகளும் அவற்றைச்சூழந்து குதிரைப் படை யானைப்படைக்கொட்டாரங்களும் நறுமணங்கமழுஞ் செவ்விய மலர்ப் பொலித்திலங்குஞ் சிங்காரவனமும், பட்டாலும் பருத்திநூலாலும் நுண்ணிய தொழில்புரி மக்களிருக்கைகளும், பல-வகை அணிநலஞ்சிறந்த சாளரங்களோடு கூடிய மாளிகைகளும். தச்சர், கொல்லர், ஓவியக்காரர், தட்டார், இரத்தின வணிகர், புலவர், இசைநூல் வல்ல பாணர் இவர்களுக்கு வெவ்வேறு இருக்கைகளும்,மாளிகைகளும், தெருக்களும் இடம்பெற்றிருந்தன" எனக் குறிப்பிடுகின்றார் அவ்வகையே நல்லூர் நகரமைப்பு பற்றி நோக்கின் வீதிக-ளின் பெயர்கள் அவர்களின் சாதிரீதியா-கத் தொழில்ரீதியாக காணப்பட்டது. பொற்கொல்லர்கள் போன்ற கைவினைஞர்கள் தென்கிழக்குப்பகுதியில் இருக்க வேண்டுமென பண்டைய இந்துக் கட்டடக்கலை தரும் கருத்துக்கேற்ப நல்லூரிலும் தென்கிழக்குப் பகுதியிலே சாயக்காரத்தெரு, தட்டாதெரு, போன்றன காணப்பட்டன. இவை இங்கே அச்சாதியினர் வாழ்ந்தமைக்கான சான்றுகளாகும். இன்றும் இவர்களின் வழித் தோன்றல்கள் இங்குள்ளனரெனினும் இவர்கள் இழிகுலத்தவர்களும் இத் தொழிலை கையாளத் தொடங்கியதால் தமது கௌரவத்தைக் குறைவடையச் செய்ததாக தொழிலைக் கைவிட்டுள்ளனர்

## நல்லூர் இராஜதானியின் நகரமைப்பு

இக்கைவினைஞர் குழாம் நல்லூர், பருத்தித்துறை, காரைநகர், ஆரியகுளம் பிராந்தியங்களிலே வாழ்ந்துள்ளனர். இம்மரபின் சாயக்காரர் துணிகளுக்கு நிறமூட்டலினை, அவற்றில் அலங்கார அச்சடித்தலினையும் செய்துள்ளனர். அவ்வகையே திரைச்சீலைகள், வேட்டிகள், சேலைகள் என பரந்தளவில் உற்பத்தி செய்துள்ளனர் பெருமாள் கோவிலடி டச்சுக்காலத்தே எவ்வாறு ஓர் கைவினைப்பாரம்பரிய அடிப்படையிலே நகரமாக நோக்கப்பட்டதோ அதேபோன்று யாழ்ப்பாண அரசர் காலத்தே நல்லூர் இராசதானியை அண்டியபகுதி அமைந்திருந்துள்ளது. இன்றும் அதன் எச்சமாக சாயக்காரர்கள் சிலர் நல்லூர் மூத்தவிநாயகர் கோவிலடியில்[1] வாழ்கின்றனர். இம்மர

1 மூத்தவிநாயகர்கோவில் முன்னைய காலத்தே சாயக்காரப்பிள்ளையார் கோவில்

பிலே வந்தவரான யாழ்ப்பாணத்தில் சாய வேலை திரைச்சீலை வேலைக்கு பிர சித்தம் பெற்றிருந்த திரு கங்காதரன். இவர் சமய நிலையிலான ஓவியர் மற்றும் கண்ணாடி ஓவியங்கள் வரைவதில் புகழ்பெற்றவர். பரம்பரை பரம்பரையாக ஆலயம் சார்ந்த வேலைகளினை செய்தலில் பிரபல்யம் பெற்றவர்களின் பரம் பரையில் வந்தவராகும். இவரது திரைச் சீலைகளினை அக்காலத்தே பல ஆலயங் களிலும் காணக்கிடைத்தன.

தானங்களில் சிறந்ததானமாகிய வஸ்துதானத்தை பரம்பரை பரம் பரையாக செய்துவந்த இவர்கள் செங்குந்தர்கள் என்றும் கைக்கோளர் என்றும் அழைக்கப்படுமிவர்கள் கல்வி யங்காட்டிலும், கரவெட்டியிலும் வழித் தோன்றல்கள் காணப்படினும் இறக்குமதி காரணமாகவும் மற்றும் பரம்பரைத் தொழிலைக் கைவிட்டு வேறுதொழில் களைச் செய்தலாலும் பாரம்பரிய பயில்வுகள் இங்கில்லையெனினும் இவர்களின் மரபுத் தொடர்ச்சியாகவும் அவற்றின் ஞாபகப்படுத்தலாகவும் ஓர்வகை குறியீட்டு முறைமையாகவும் இன்றும் நல்லூரிற்கான வருடாந்தக் கொடிச் சேலையும், கொடிக்கயிறும் திருவிழா ஆரம்பமாகும்போது முதல்நாள் செங்குந் தரால் கொன்றலடி வைரவர் கோவிலுக்கு அண்மையிலுள்ள வேல்மடம் முருகன் ஆலயத்திலிருந்து எடுத்துச் சென்று வழங்கப்படுகின்றது. இது இந்தியாவின் மரபுத்தொடர்ச்சியும் சமயரீதியாக உமாபதிசிவாச்சாரியாரின் கதையினூ டாகவும் செங்குந்தர்கள் தொடர்புபடுத்தப் பட்டுள்ளனர். முன்னையகாலத்தில்இந்த மக்களால் நெய்யப்பட்ட கொடிச் சேலையே ஆலயங்களில் பயன்படுத் தப்பட்டு வந்தது. அவ்வகையே முன்னர் பிரசித்தமான எல்லா ஆலயங்களிலும் கொடிச்சேலையும், கொடிக்கயிறும் செங் குந்தராலே எடுத்துச்சென்று வழங்கு தல் மரபாகக் காணப்பட்டுள்ளது இன்று நல்லூரிலும், வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோவில், வயல்வெளிக் கந்தசுவாமி கோவில், நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில், கரவெட்டி யாக்கரைப் பிள்ளையார் கோவில், பருத்தித்துறை பசு பதீஸ்வரர் கோவில், கரவெட்டி நுணாவில் பிள்ளையார் கோவில் ஆகியவற்றிலும் தொடரப்படுகின்றது.

மேலும் ஒல்லாந்த, பிரித்தானியக் காலங்களிலும் இந்தியாவினின்று பல நெசவுக்காரர்களினை வரவழைத்த தாகவும் அவர்களில் கைக்கோளரினை நல்லூரிலும், சேணியரை வண்ணார் பண்ணையிலும் ("சேணியர்தெரு" என அழைக்கப்பட்டது) குடியமர்த்தினர். டச்சுக்காலத்தில் சாதிகளினை தொழிற்குழு மங்களினை அடிப்படையாகவும் தென் னிந்தியாவினை ஒத்ததாகவும் உருவாகிய கோயில்நகரமும் ஆகும். இது சாயக் காரரினை ஆனைக்கோட்டையிலும் நல்லூரிலும் குடியமர்த்தியுள்ளனர். ஆரிய குளப்பகுதியினின்று பெறப்பட்ட தென்இந்தியாவினின்று வந்த தமிழ்மொழி பேசத்தெரிந்த ஆந்திர மாநிலத் தெலுங்கர்களான சாயக்காரர்களில் ஒரு தொகுதியினரை பருத்தித்துறையின் துறை முகத்துக்கு அண்மையில் சந்தைக்கு மேற்குப்புறமாகச் செல்லும் வீதிப்பகுதியில் குடியமர்த்தியுள்ளனர். இதற்கு சான்றாக "சாயக்காரஒழுங்கை" என இன்றும் இவர்கள் வாழ்ந்த பகுதி அழைக்கப்படு கின்றது (பருத்தித்துறையூராம்- பக்கம் 245-246)

இந்தியாவினின்று வந்தவர்களில் நாயக்கர், கவறைமரபு இருவரும் வெவ்வேறு மரபினராயினும் ஒரு பாலார் வைஷ்ணவர்களாகவும் (பெருமாள் கோவிலடியில் வாழ்ந்த சேணியர்) ஒரு

---

எனவே அழைக்கப்பட்டது.

பாலார் சைவசமயிகளாகவும் விளங்கினர். ஆயினும் ஒருபாலார் போல் விளங்கினர். இவர்களுக்கிடையேயுள்ள தொழில் ஒற்றுமை காரணமாக (சாயமிடல்- சாயமிட்ட துணியில் வர்ணச்சாய ஓவியம் தீட்டல்) இவர்களுக்கிடையே திருமணக்கலப்பும், தொழிற்கலப்பும் ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் சாதிமுறைமையினால் கல்வி, தொழில் முறைமை மட்டுமன்றி திருமணங்கள் விருந்தோம்பல் போன்றனவும் இவ்வடிப்படையிலே கட்டிறுக்கமாக அமைந்திருந்தன.

இவ்வாறாக நம் நெசவுப்பாரம்பரியம் நீண்டதோர் இந்தியத் தொடர்ச்சிக்கும் வரலாற்றுக்கும் சொந்தமானவர்கள். ஒட்டுமொத்தமாக இலங்கை வரலாற்றில் குவேனியை விஜயன் காணும்போது நூல்நூற்றுக் கொண்டிருந்தாள் எனும் மகாவம்சக்கூற்று இலங்கையில் நெசவின் தொன்மையினையும் அன்றுதொட்டு மக்கள் வாழ்வில் நெசவு ஓர் முக்கிய அம்சமாக விளங்கியதனையும் முக்கிய தொழிலாகப் பயிலப்பட்டதனையும் உணர்த்துகின்றது. அத்தோடு அக்காலத்திலே விஜயன் திருமணத்துக்காக வந்த பாண்டிய இளவரசியோடு 18 கைவினைஞர்கள் நெசவாளர் உட்பட இந்தியாவினின்று வந்ததாகக் கூறப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்திலும் நெசவுடன் தொடர்புறுவதாகக் காணப்பட்ட, காணப்படும் குழுமத்தினர் தம்மை இந்தியப் பூர்வீகத்தோடு தொடர்புபடுத்தப்படுத்தியுள்ளனர்.

கலை, கைவினைப்பாரம்பரியம் என்பதே ஓர் சமூக நடவடிக்கை. பொதுவாகவே கலையில் கூட்டுவிடயம், குழுநடவடிக்கை முக்கியமளிக்கப்படுகின்றது. முதலாளி தொழிலாளி எனும் பாகுபாடு அக்காலத்தே இருக்கவில்லை. எல்லோரும் ஒருங்குசேர்ந்து ஓர் பொதுத் தொழிற்சாலையில் வேலை செய்யும் வழக்கமும் அக்காலத்திலில்லை. ஒவ்வோர் குடிசையும் ஒவ்வோர் தொழிற்சாலையாகவும் குடும்பத்தலைவன் முதலாளியாகவும் மனைவி, மக்கள், உறவினர் தொழிலாளிகளாகவும் விளங்கினர். யாழ்ப்பாண சமூக அமைப்பின் இன்னொரு முக்கிய அம்சம் நிலவிய குடும்பநிலை தொழில்முறைமையாகும். இவ்வகையாக சிறுகைத்தொழில்கள் செய்தவர்கள் சிறுசிறு கூட்டங்களாகவும் தலைமுறை தலைமுறையாகவும் குறிப்பிட்ட கைவினையினைப் பயின்று வந்த அவர்களுக்கு அத்தொழில்கள் அவர்களின் தனிஉரிமையாகவும் இருந்தது.

அவ்வகையே பரம்பரை பரம்பரையாக தந்தையின் தொழில்களையே தனயர்களும் செய்தனர். இதனால் பண்டைய கைத்தொழில்முறைமை பற்றி கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி பின்வருமாறு விளக்குகின்றார். "உண்மையான கைவினை மாணவன் வேலைத்தளத்தில் பயிற்றப்படுவதோடு வளர்க்கவும்படுகின்றான்அவன் தன் தந்தையின் சீடனுமாகின்றான். அவன் இந்த நிலமைகளை இழக்க நேரிடின் உலகிலுள்ள எந்தத் தொழிற்கல்வியும் இதற்கு ஈடுசெய்ய முடியாது. வேலைத்தளத்தில் ஆரம்பப் படுத்தல் தொழில்முறை, உண்மைப் பொருள்களோடும் உண்மை நிகழ்ச்சி சூழல்களோடும் தொடர்புள்ளதாக பணி செய்வதன் மூலமும் ஆசானுக்கு நேரில் தொண்டாற்றுவதன் மூலமும் கற்கப் படுகின்றது. அங்கு கற்பிக்கப்படுவது தொழில்முறைமை மட்டுமன்று வேலைத் தளத்தில் வாழ்க்கையே உள்ளது. அது மாணவனுக்கு உளப்பண்பாட்டோடு வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களின் அறிவையும் அளிக்கின்றது. கலைக்கல்விக்கு தொழின்முறையைக் காட்டிலும் இவையே இன்றியமையாதன" இப்பயில்வு முறைமையே நெசவுப் பாரம்பரியத்திலும் காணப்பட்டது.

ஓர்நாட்டில்மக்கள்யாவரும்ஒரேவித மான தொழிலை விரும்பிச்செய்தல் வழக்கிலில்லை. அவ்வகையே குறிக்கப்பட்ட மக்கள், குறிக்கப்பட்ட தொழில்களைப் பரம்பரையாகச் செய்து வந்தனர். தொழில் முறைமை, கல்வி ஆகியனவும் பொதுவாக சாதி அடிப்படையிலே இடம்பெற்றன. அவ்வகையே வேலையில்லாப் பிரச்சனையுமில்லை. ஒவ்வொருவரும்உயிர்வாழவேண்டியசொந்தத் தொழில் ஒன்றுமிருந்தது. ஒரு கூட்டத்தினரின் தொழிலை இன்னொரு கூட்டத்தினர் செய்யமுற்படவுமில்லை அவ்விதம் செய்யமுற்பட்டோர் குலத்துரோகிகள் எனப்பட்டனர். அவ்வகையே "தன் தொழில்விட்டவன் சாதியிற் கெட்டவன்" எனக் கூறப்பட்டது. ஆயினும் சமூகமேனிலை யாக்கமாக பின்னர் இப்பாரம்பரியத் தொழில்களை விட்டு வெளியேறுவதன் மூலம் தாம் இந்த சாதி-யெனும் குறிகாட்டியினை மறைக்க முற்படுகின்றனர். காலனித்துவ தாக்கம், ஆங்கிலக்கல்வி, புதியபொருளாதார அமைப்பு மற்றும் இலவசக்கல்வி கற்போரின் பெருக்கம் ஆகியனவும் சாதிமுறைமை தொழில்ப்பயில்வினின்று விலக்கிவைக்கின்றது.

"செய்யும் தொழிலே தெய்வம்" எனக் குலத்தொழிலை சிலர் தொடர்ந்து செய்து வந்தாலும் பின்னர் அரசஉதவிகளின்றி பொருளாதார பற்றாக்குறையும் அவர்களினை தொழில்களினை கைவிட்டு வேறு தொழில்களினை நாடி செல்ல காரணமாகின்றன. அத்தோடு அரசின் கவனயீனமும், போதிய ஊக்குவிப்பின்மையும், வளங்களின் பற்றாக்குறையும், இளைய சமூகத்தினரின் நாட்டமின்மை மற்றும் தயாரித்த இறக்குமதி ஆடைகளின் மேலான மோகமும், வரவேற்பும், குலத்தொழிலாக நெசவினைச் செய்து வரும் நெசவுக்குழுமங்களின் இளைய சந்ததியினர் கல்வி வேலைவாய்ப்பு, வெளிநாடு நோக்கிய நாட்டமும், அவர்களிடையேயான விருப்பமின்மை போன்ற காரணிகளும், இத்தொழிலினைச் செய்வதனால் தம்மைச் சாதி ரீதியாக இனங்கண்டுகொள்வர் எனும் தாழ்வு மனப்பாங்குபோன்ற காரணிகளால் இன்று யாழ்ப்பாணத்தில் இக்கைவினை பற்றிய ஆர்வம் குறைந்து கொண்டே வருகின்றது. அவ்வகையே யாழ்ப்பாணத்தில் இன்று அருகிப் போன கைவினைப் பாரம்பரியமாகவும் அரசின் கைத்தொழிற்கல்வியின் ஓர் பகுதியாகவுமே உள்ளது.

## முடிவுரை

நெசவுக்கைவினை என்பது உலகிலேயுள்ள அனைத்து நாகரிகத்தினையும் அளவிடும் சுட்டியாகவும், பண்பாட்டுக் கலாசாரத்தின் குறியாகவும் விளங்குகின்றது. நெசவுக் கைவினைப் பாரம்பரியம் என்பது குறிப்பாகத் தமிழ்மக்களின் வாழ்வியற் பண்பாட்டுப் பாரம்பரியத்தோடு இணைந்த ஓர் விடயமாகவுள்ளது. நெசவு மற்றும்சாயமிடல்பற்றியபுரிந்துகொள்ளல் என்பது மறுதலையாக நல்லூர் மக்களின் பண்பாடு, நாகரிகம் போன்றவற்றினை மட்டிடுவதாகவேயுள்ளது. நீண்டதோர் நெசவுப்பாரம்பரியத்தோடு தொடர்புடைய நாம் அதனை மறந்தது நம் துரதிஷ்டமே. இவ்வகையே நல்லூர் சமூகத்தின் ஓர் காலகட்டக் குறிகாட்டியாக விளங்கிய நெசவும் சாயமிடலும் இன்று அருகிப்போகும் பாரம்பரியத்தின் நினைவுச்சின்னமாகவே நோக்கக் கூடியதாகவுள்ளது. அவ்வகையே இனிவரும் சந்ததியினர் நெசவுக்குமிடையான பாரம்பரியத் தொடர்ச்சியினை உணர்ந்து கொள்வாரா?

**உசாத்துணை**

1. Arnold wright.
1999,Twentieth centuary impression of Ceylon, Newdelhi: Asian educational services.

2. Katiresu, S
1905, A Handbook to the Jaffna Penninsula & Souvenir of the opening the railway to the north, tellipalai,Jaffna: American Ceylon mission press.

3. Rasanayakam, C
1984, Ancient Jaffna, Newdelhi: Asian education service.

4. Forwarded by Servyn St. S. Casie chitty(first Ceylonese civil servant) 1934, Ceylon Gazetter, Cey lon:Cotta church mission press.


5. இரகுவரன், பா
2012.07.03, பருத்தித்துறையூராம்: தேடல் வெளியீடு06.

6. இராசநாயகம், செ
1999. யாழ்ப்பாணச்சரித்திரம், புது டெல்லி: ஏசியன் எடுகேஷன் சர்வீசஸ்.

7. கிரிதரன், வ.ந.
1998. நல்லூர் இராஜதானி நகர அமைப்பு: ஸ்நேகா மங்கை பதிப்பகம்.

8. சிவத்தம்பி, கா
2000.யாழ்ப்பாணச் சமூகம், பண் பாடு, கருத்துநிலை. கொழும்பு: குமரன் பதிப்பகம்.

9. சிற்றம்பலம், சி.க.
1992. யாழ்ப்பாண இராச்சியம், திரு நெல்வேலி: யாழ் பல்கலைக்கழக வெளியீடு.



நல்லூர் கொடிச்சீலை